# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 323/ 2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 10 |
| Name | : டாக்டர். ராகேஷ்குமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அப்பல்லோ மருத்துவமணையில் பணி மருத்துவராக பணியில் உள்ளேன். கடந்த 20.07.2011ம் தேதி மாலை 7.45 மணியளவில் பணியில் இருந்தபோது போஸ் என்பவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவர் தன்னை தனது மருமகன் அருவாளால் பின்கழுத்தில் வெட்டியதாக சொன்னார். நான் மேற்படி காயத்தை பார்வையிட்டேன். அவரை பரிசோதித்துவிட்டு அவருக்கு சிகிச்சையளித்தேன். அவர் 27.07.2011 வரை சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் வழங்கியதுதான். மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.4. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்டவர் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்கு பரிந்துரையின் பேரில் தான் சிகிச்சைக்கு

வருவார்கள் என்றால் சிலவேளை பரிந்துரையில்லாமலும் வரலாம். நான் காயத்தை பார்க்கும்போது மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை கொடுக்கப்பட்டிருந்ததா என்றால் ஞாபகமில்லை. காயம்பட்டவருக்கு கட்டுகள் போடப்பட்டிருந்ததா என்றால் கட்டு போடப்பட்டிருந்தது. பொதுவாக வெட்டுக்காயத்திற்கும், குத்துக்காயத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவர் எங்கள் மருத்துவமனைக்கு வருவதற்கு முன்னரே காயத்திற்கு தையல் எதுவும் போடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. மேற்படி காயம் திறந்த காயம் இல்லையென்பதால் தையல் போடவில்லை என்றால் சரியல்ல, ஆழமான காயம் தான். மேற்படி காயத்தின் நீளம், அகலம், ஆழம் ஆகியவற்றினை நான் வழங்கிய காயச்சான்றிதழில் சொல்லவில்லை என்றால் சரிதான். காயத்தின் வடிவத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயத்தின் வடிவத்தை பார்த்தால் அது எந்த ஆயுதத்தால் தாக்கப்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். காயம்பட்டவருடன் யார் உடன் வந்தார் என்றால் அவரது அண்ணன் ராஜாக்கிளி வந்தார். அவரிடம் சம்பவம் பற்றி விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். காயம்பட்டவர் ஏற்கனவே உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரங்கள் தெரியவந்தும், வழக்கில் அது விரோதமாக இருப்பதால் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி காயம் இரும்பின் கூர்மையான பகுதியில் மேலிருந்து கீழே விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென
ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால
கையொப்பம் இடப்பட்டது.

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி